மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஶ்ரீலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீயினதும் (''கம்பனி''), கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்த கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் துறையிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றின் மூலம் நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தொகுதியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 விடயங்கள் மீதான அழுத்தம்

எனது அபிப்பிராயத்தினை முனைப்பழி செய்யாது, எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட், துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான 44 ஆம் குறிப்புக்கு எனது கவனத்தைச் செலுத்துகின்றேன்.

#### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் கம்பனி மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களுக்கான 44 ஆம் குறிப்பில் விபரிக்கப்பட்டவாறு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம், துணைக்கம்பனியின் தேறிய சொத்துக்கள் கூறப்பட்ட மூலதனத்தின் அரைவாசியைவிடக் குறைவாகக் காணப்படுகின்றதுடன், தீவிர மூலதன இழப்பு நிலமையொன்றை முகங்கொடுக்கின்றமை குறிப்பிடப்படல் வேண்டும்.

- 2011 இன் 03 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறையின் பிரமாணங்கள் அதிகாரச்சட்டத்தின் (திருத்தப்பட்டது) 53 ஆம் பிரிவின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களுக்கான 44 ஆம் குறிப்பில் கலந்துரையாடப்பட்டவாறு,

கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டவாறு நீண்டகால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொது காப்புறுதி வியாபாரம் என்பவற்றை இரண்டு தனியான கம்பனிகளாக பிரித்திருக்கவில்லை.

- "கடன் கொடுத்து தீர்க்கும் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகள் 2015" 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறையின் பிரமாணங்கள் அதிகாரச்சட்டத்தினால் வேண்டப்படும் மூலதன போதுமை விகிதம் மற்றும் மொத்த மூலதனக் கிடைப்பனவிற்காக வேண்டப்படும் அதிகிழிந்த தேவைப்பாட்டு தொகுப்பினை (minimum required thresholds set) துணைக்கம்பனியின் ஆயுளற்ற (non life) வியாபாரம் பூர்த்திசெய்திருக்காத அதேவேளை மொத்த மூலதனக் கிடைப்பனவிற்கான அதிஇழிந்த தேவைப்பாட்டு தொகுப்பினை ஆயுள் (life) வியாபாரம் பூர்த்திசெய்திருக்கவில்லை.

## 2.2 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைப்பின் அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் (எஸ்எல்எவ்ஆர்எஸ் / எல்கேஏஎஸ்) கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனியின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களினை தொகுதி நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கியுள்ளது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட் துணைக்கம்பனியின் உரிமைத்துவத்தில் 84.12 சதவீதத்தினையும், லங்கா செக்கியூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட் இணைக்கம்பனியின் உரிமைத்துவத்தில் 29 சதவீதத்தினையும் கம்பனி கொண்டுள்ளது. முன்னைய ஆண்டின் இறுதியில் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்குறித்த கம்பனிகளில் முதலீடுகளின் நிலைமை பின்வருமாறு காணப்பட்டது.

| கம்பனியின் பெயர் | முதலீட்டின் நிலைமை | |
|---|---|---|
| | 2017<br>ரூபா'000 | 2016<br>ரூபா'000 |
| **துணைக்கம்பனி - விலைகூறப்பட்ட கம்பனி** | | |
| எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட் | 516,096 | 516,096 |
| கழி - நட்டக்கழிவிற்கான ஏற்பாடு | (494,979) | (438,790) |
| **தேறிய முதலீடுகள்** | **21,117** | **77,306** |
| **இணைக்கம்பனி - விலைகூறப்பட்ட கம்பனி** | | |
| லங்கா செகியூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 81,084 | 81,084 |
| கழி - நட்டக்கழிவிற்கான ஏற்பாடு | - | - |
| **இணைக்கம்பனிகளில் தேறிய முதலீடுகள்** | **81,084** | **81,084** |
| **மொத்த முதலீடுகள்** | **102,201** | **158,390** |

## 2.3 கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.3.1 நீண்ட நிலுவையாகவுள்ள மீதிகள் - ஏனைய சொத்துக்கள்

(அ) ஆண்டின் இறுதியில் உள்ளபடியான ஏனைய கடன்பட்டோர்கள், சட்டக் கட்டணங்கள், வங்கி உத்தரவாதங்கள் மீதான உரிமைக் கோரல்கள் தொடர்பில் நீண்ட நிலுவையாகவுள்ள மீதிகள் முறையே ரூபா 5,359,147, ரூபா 1,313,886 மற்றும் ரூபா 1,776,489 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றின் அறவிடுகை ஐயத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

(ஆ) பெறவேண்டிய மொத்த காப்புறுதி முகவர் தரகு ரூபா 14 மில்லியனொன்றில், ரூபா 10,614,474 மீதியொன்று ஒரு வருடத்திற்கு அதிகமாக நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.2 நீண்ட நிலுவையாகவுள்ள மீதிகள் - ஏனைய பொறுப்புக்கள்

(அ) கடன்கொடுத்தோர் மீதிகளிலுள்ள ரூபா 11,625,290 தொகையான மீதியொன்று ஒரு வருடத்திற்கும் அதிகமாக நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு, வங்கி இணக்கக்கூற்றில் 6 மாதங்களினை விட அதிகமாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 17,352,539 தொகையான மாற்றஞ்செய்யப்படாத நேரடி வைப்புக்களும் ஒரு வருடத்திற்கும் அதிகமாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 13,374,061 தொகையான சமர்ப்பிக்கப்படாத செலுத்துகைகளும் காணப்பட்டன.

(இ) தொங்கல் கணக்கில் ரூபா 33,727,741 தொகையான இணக்கஞ்செய்யப்படாத மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன் பிரித்தெடுப்பொன்று (break up) கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை.

### 2.3.3 முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள்

முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 543.8 மில்லியன் தொகையான சொத்துக்கள் வங்கியினால் இதுவரை பயன்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்படு வாழ்நாளினை மீளாய்வதற்கான நியாயமான ஆவணத்துடனான முறையான செயன்முறை வங்கியிடம் காணப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், தொகுதியின் தொழிற்பாடுகளினை தொடர்புடைய முன்னைய ஆண்டிற்கான ரூபா 239.83 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 239.46 மில்லியன் வரிக்கு முன்னான தேறியலாபமொன்றை பதிவுசெய்திருந்தமையினால், நிதிசார் விளைவுகளில் ரூபா 0.37 மில்லியன் அல்லது 0.15 சதவீத பற்றாக்குறையொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது துணைக்கம்பனியொன்றை உள்ளடக்கியிராத கம்பனியின் தொழிற்பாடுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 232.9 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 228.65 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றை விளைவித்திருந்தமையினால், நிதிசார் விளைவுகளில் ரூபா 4.25 மில்லியன் அல்லது 1.82 சதவீத குறைவினை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டில்

கடன்களுக்கான நட்டக்கழிவு கட்டணங்கள் ரூபா 24.24 மில்லியனிலிருந்து ரூபா 244.23 மில்லியன் வரை அதிகரித்தமை மேற்குறித்த குறைவுகளுக்கு காரணமாகக் காணப்பட்டது.

### 3.2 பெறுமதிசேர்க்கை கூற்று

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கயின் பெறுமதிசேர்க்கை முறையே ரூபா 1,544 மில்லியன் மற்றும் ரூபா 1,202 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அது 28 சதவீத அதிகரிப்பொன்றை காட்டுகின்றது. ரூபா 782 மில்லியன் மற்றும் ரூபா 266 மில்லியனாகக் காணப்பட்ட முன்னைய ஆண்டு ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடும்பொழுது அதன் ஊழியர்கள் மற்றும் அரசுக்கு முறையே ரூபா 1,027 மில்லியன் மற்றும் ரூபா 307 மில்லியனை வங்கி ஒதுக்கீடு செய்திருந்தது.

### 3.3 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

#### 3.3.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான அனுமதிபெற்ற விசேட வங்கிகளின் சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் மற்றும் உரிமை மீதான திரும்பல் முறையே 1 சதவீதம் மற்றும் 19.2 சதவீதமாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும், வங்கியின் மேற்குறித்த விகிதங்கள் 2017 ஆம் ஆண்டிற்கு முறையே 0.3 சதவீதம் மற்றும் 3.18 சதவீதமாக மாத்திரம் மாத்திரம் காணப்பட்டன.

(ஆ) 8.35 சதவீதமாகக் காணப்பட்ட துறைசார் விகிதத்துடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டிற்கான வங்கியின் தேறிய இலாப விகிதம் 1.58 சதவீதமாக அறிக்கையிடப்பட்டது.

(இ) 4.3 சதவீதமாக காணப்பட்ட துறைசார் விகிதத்துடன் ஒப்பிடுகையில் வங்கியின் செயற்பாடற்ற விகிதம் (மொத்தம்) 10.10 சதவீதமாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 3.4 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கம்பனியின் முதிர்ச்சி இடைவெளி பகுப்பாய்வு

| | கேள்வி அடிப்படையில் (ரூபா.'000) | 3 மாதங்கள் வரை (ரூபா.'000) | 3-12 மாதங்கள் வரை (ரூபா.'000) | 1-3 வருடங்கள் (ரூபா.'000) | 3-5 வருடங்கள் (ரூபா.'000) | 5 வருடங்களை விடவும் அதிகம் (ரூபா.'000) | மொத்தம் (ரூபா.'000) |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| நிதிச் சொத்துக்கள் | 1,145,550 | 6,361,615 | 9,472,681 | 12,695,973 | 4,362,205 | 519,539 | 34,557,563 |
| நிதியல்லாச் சொத்துக்கள் | - | 271,114 | 42,603 | - | - | 773,927 | 1,087,644 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1,145,550** | **6,632,729** | **9,515,284** | **12,695,973** | **4,362,205** | **1,293,466** | **35,645,207** |
| **உரிமையும் மூலதனமும்** | | | | | | | |
| நிதிப் | 1,349,831 | 11,547,276 | 9,135,985 | 5,725,831 | 3,878,401 | - | 31,637,324 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பொறுப்புக்கள் | | | | | | | |
| நிதியல்லாப் பொறுப்புக்கள் | - | 129,893 | 7,473 | - | - | 636,697 | 774,063 |
| உரிமை | - | 6,577 | - | - | - | 3,227,243 | 3,233,820 |
| **மொத்த உரிமையும் பொறுப்புக்களும்** | **1,349,831** | **11,683,746** | **9,143,458** | **5,725,831** | **3,878,401** | **3,863,940** | **35,645,207** |
| **முதிர்ச்சி இடைவெளி** | **(204,281)** | **(5,051,017)** | **371,826** | **6,970,142** | **483,804** | **(2,570,474)** | **-** |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் வங்கியின் தலைவருக்கு விநியோகிக்கப்பட்ட எனது விபரமான அறிக்கைகள் மூலம் வங்கியின் கவனத்திற்கு கொண்டவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) முதலீட்டு ஆதனங்களின் விலைமதிப்பு
(ஆ) பௌதீகரீதியிலுள்ள காசின் மெய்மையாய்வு
(இ) கையிலுள்ள காசோலைகளினை கையாளுதல்
(ஈ) வங்கி இணக்கக்கூற்றுக்களினை தயாரித்தல்
(உ) வங்கி கணக்குகளினை முகாமை செய்தல்
(ஊ) பெறவேண்டிய பற்றுச்சீட்டுக்களினை விநியோகித்தல்